*மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் இதைப்போல நடக்குமேயானால் நாட்டுக்குத் தேவையான அளவுக்குச் செய்திகளும், நாட்டு மக்களுக்குப் பயன்படுகிற வகையில் போய்ச் சேரும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு; அவருக்கு நான் 10 நிமிடங்கள்தான் கொடுத்திருந்தேன். இருந்தாலும் அவர் அரை மணி நேரத்திற்கு மேல் எடுத்து இருக்கிறார். அதே நேரத்திலே குறுக்கீடுகள் இருந்தாலும் கூட, குறுக்கீடுகளுக்கும் அவர் பதில் சொன்னார். குறுக்கே குறுக்கே, திரு. பழனிசாமியும் பதில் சொன்னார். அமைதியாக விவாதம் நடந்தால் இந்த அளவுக்கு அவை நடவடிக்கைகளும் நல்லமுறையிலே போகும் என்பதற்கு இதுதான் எடுத்துக்காட்டு. அவர் ஒன்றும் அரசாங்கததைப் பாராட்டிக்கொண்டே பேசவில்லை. அரசாங்கத்தின்மீது குறை கூறித்தான் பேசினார். அதற்கு மாண்புமிகு அமைச்சர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இங்கேயே இருந்து, அவருக்கு உரிய பதிலை அவ்வப்போது தெரிவித்தார்கள். இது, இப்போது விவகாரம் செய்துவிட்டு, இங்கே முறைகேடாக நடந்துகொண்டு, வெளியே போயிருக்கிற காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புரிந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்து, பேரவையினுடைய இந்த விவாதத்தில் இன்றைக்குப் பேசுவதாகப் பெயர் கொடுத்த உறுப்பினர்களில் இப்போது இருக்கிற உறுப்பினர்களே, இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்த இரண்டு உறுப்பினர்களும் பேசி நாளைய தினம் விவாதத்தை நீட்டுவது என்றால் இப்போதைக்குக் கால அவகாசம் இல்லை. நாளைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே நீண்ட நேரம் பதில் அளிக்க வேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார். இரண்டு மணி நேரமாவது வேண்டுமென்று கேட்டிருக்கிறார். எனவே, இந்த இரண்டு பேரும் பேசி, நாளைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் அவர் கேட்ட அளவுக்குக் கால அவகாசம் தர முடியாது. எனவே, நாளையதினம் கேள்வி நேரம் வேண்டாம் என்று கருதுகிறேன். அதற்குரிய முடிவை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அறிவிக்கலாம்.

11. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை

விதி 32-ஐ 31—3—1994 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குப் பெயர் கொடுத்திருந்த உறுப்பினர்களில திரு. திருநாவுக்கரசு இருக்க முடியாத சூழ்நிலையை அவரே உருவாக்கிக் கொண்டார். திரு. ஆண்டித் தேவர் இல்லை. எனவே அவர்கள் இன்றைக்குப் பேசுவதற்கு நான் கொடுத்திருந்த வாய்ப்பைப் பயன்படுத்தத் தவற விட்டு விட்டார்கள். மீண்டும் அவர்களுடைய கோரிக்கையை ஏற்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-25)

நாளைக்கு திரு. செ. கு. தமிழரசன், திரு. நா. சா. பழனிசாமி ஆகிய இருவரும் பேசி, அதன் பின்னர் நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிற ஒரு நிபந்தனையின் அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சியினர் அந்த நிபந்தனைக்கு உட்பட்டு வந்து பேசுவார்களேயானால் அவர்களும் பேசி, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதிலுரை அளிப்பார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

72. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] [தமிழ், ஆங்கிலம்].